**வரையறுக்கப்பட்ட மகாவலி மதியுரைச் சேவைகள் பணியகக் (தனியார்) கம்பனி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மகாவலி மதியுரைச் சேவைகள் பணியகக் (தனியார்) கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணேவல அணையை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இருப்பு கம்பிகள் மற்றும் இரும்பு வாயிற் கதவுகளின் இருப்புக்கள் அந்த ஒப்பந்தம் நிறுத்தப்பட்டமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது. | கணேவல அணையை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட இருப்பு கம்பிகள் மற்றும் இரும்பு வாயிற் கதவு சொத்தாக கணக்கீடு செய்யும் போது கிரயம் அல்லது தேறிய தேறக் கூடிய பெறுமதி இரண்டில் குறைந்த | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியம இலக்கத்தின் 13.4 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பின் கிரயம் அல்லது தேறிய தேறக் கூடிய பெறுமதி இரண்டில் குறைந்த பெறுமதி சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது தேறிய தேறக் கூடிய பெறுமதி கணிப்பீடு செய்யப்படாமல் கிரயமான ரூபா 1,412,685 சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டு இறுதியிருப்பு சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இரும்பு கம்பிகள் நிறுவனத்தில் கொள்கலனில் துருப்பிடித்தலை குறைக்கும் வகையில் பாகாப்பாக உறையிடப்பட்டுள்ளது. தற்போது இந்த இரும்பு கம்பிகள் மற்றும் வாயிற்கதவு என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் விருப்பம் தெரிவித்துள்ளது. | |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியம இலக்கத்தின் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கம்பனிக்குச் சொந்தமான ரூபா 3,587,095 கிரயமான 40 நிலையான சொத்து விடயங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த நியமத்திலுள்ள விடயங்களின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு 2022 இன் நிதி ஆண்டு முதல் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் பிரகாரம் பெறுமதிசேர் வரி விதித்தல் பதிவு செய்த நபர்களுக்கு மாத்திரமாக இருந்ததுடன் கம்பனியும் வரி பதிவு செய்த நிறுவனமாக 2021 மார்ச் 02 ஆந் திகதி பெறுமதிசேர் வரி பட்டியலின் கீழ் ரூபா 131,580 கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது. எனினும் | மகாவலி மதியுரை பணியக சேவைக் கம்பனி வரி பதிவு செய்துள்ள நிறுவனமாகும். கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்திற்காக எமது நிறுவனம் 2013 ஆம் ஆண்டின் போதே உடன்படிக்கை செய்திருந்தது. பெறுமதிசேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன இரு தரப்பினரும் பதிவு செய்த நபரினால் அறவிட்டு பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக செலுத்துவதன் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2020 செப்தெம்பர் மாதம் முதல் கம்பனி வரி விடுதலை நிறுவனமாக உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு அறவிடப்பட்ட வரித் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கோ அல்லது செயற்திட்டத்திற்கு மீள வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்காமல் கம்பனியின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் வரிக் கொள்கை மற்றும் பெறுமதிகள் காலத்திற்கு காலம் மாற்றமடைந்திருந்தது. அதன் பிரகாரம் 2020 செப்தெம்பர் மாதம் முதல் செலுத்த வேண்டிய வரி எல்லை மற்றும் வரிச் சதவீதம் அரசாங்கத்தினால் மாற்றப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் இது இறுதியாக பெற வேண்டிய பட்டியலாக இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு எங்களுக்கு காரணமாக இருந்தது. இந்த அறவிடப்பட்ட வரி அளவு அரசாங்கத்தின் வரிக் கொள்கை தீர்மானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய எல்லை உயர்த்தப்பட்டதன் காரணமாக எமது நிறுவனம் செலுத்த வேண்டிய வரி விடுவிக்கப்பட்டிருந்தது. அக் காரணத்தின் அடிப்படையில் அறவிடப்பட்ட வரியின் அளவு நடப்பாண்டின் வருமானத்தில் சீராக்கப்பட்டுள்ளது. | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 வருடங்களை விஞ்சிய ரூபா 4,660,851 தொகையான பெறவேண்டிய 08 கணக்கு மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மகாவலி அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்ட ரூபா 1,319,471 தொகை அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அணைப் பாதுகாப்பு செயற்திட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 442,647 தொகை அந்த செயற்திட்டம் முடிவடைந்திருந்தமையினால் அறவிடுவதில் பிரச்சினைகள் எழுந்திருந்தது. | சகல பெறவேண்டிய மீதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக 2022.02.08 ஆந் திகதி மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. முகாமைத்துவத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இந்த மீதிகளில் 2022 மே வரையில் ரூபா 1,960,961 வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி மீதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,793,076 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 3,599,310 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதியாக இருந்ததுடன் தீர்க்கப்படாமல் காணப்பட்டது. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தீர்த்துவைக்கப்படாத மீதியில் ரூபா 3,115,071 தொகை கிங் நில்வளா செயற்திட்டத்திற்காக கிடைத்த முற்பணமாக இருந்ததுடன் செயற்திட்டத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மிகுதி ரூபா 318,200 தொகையும் யான்ஓயா செயற்திட்டத்தின் முற்பணமாக இருந்ததுடன் அந்த செயற்திட்டத்தின் வேலையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,284,205 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 13,924,210 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,640,005 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாட்டு வருமானம் உயர்வடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் 2021 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டங்கள் 2022 யூன் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 04 செயற்திட்டங்களின் சுற்றாடல் தாக்கங்களை மதிப்பிடல் மற்றும் 02 செயற்திட்டங்கள் சமூக பொருளாதார ஆய்வு மற்றும் மீள் குடியமர்த்தலுக்கான திட்டங்களை தயாரித்தல் 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணியாக இருந்தமை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த எதிர்பார்க்கப்பட்ட பணிகளின் கீழ் சேவை பெறுநர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் | 2021 ஆம் ஆண்டின் உரிய செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பெறுகைத் திட்டம் என இரண்டும் தயாரிக்கப்பட்டிருந்தது. கடந்த சில ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையினால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்துகொள்வதில் நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டமை இதற்கு காரணமாகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

காலஎல்லை தொடர்பான தகவல்கள் வெளித்தரப்பினரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டிய சந்தர்ப்பங்களின் போது அவற்றை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலஎல்லை, அறிக்கைகளின் மொழிபெயர்ப்பிற்காக வழங்க வேண்டிய காலஎல்லை, மதியுரைச் சேவை வழங்குகின்ற உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள், நடவடிக்கைகளின் காலஎல்லை மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக பணத்தை அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலஎல்லை தொடர்பான விபரங்கள் அதில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்த தகவல்கள் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை அமுல்படுத்துதல் தொடர்பாக பொறுப்பு கூறுகின்ற பிரிவு அல்லது உத்தியோகத்தர் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியின் பொறியியலாளர் பிரிவினால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக எந்தவொரு புதிய செயற்பாட்டு நடவடிக்கைகளும் கையேற்கப்படாமல் இருந்ததுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் 2021 ஆம் ஆண்டின் போது ஒரு செயற்பாட்டு நடவடிக்கை கையேற்கப்பட்டிருந்தது. 02 செயற்திட்டங்களின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் மூலம் ரூபா 2,789,200 தொகை, நிர்மாண நடவடிக்கைகளிலிருந்து ரூபா 6,737,384 தொகையுமாக ரூபா 9,526,584 தொகையான செயற்பாட்டு வருமானம் மற்றும் ரூபா 2,417,880 நிலையான வைப்பு வட்டி என்பன மீளாய்வாண்டிற்காக கிடைத்திருந்த போதிலும் கம்பனி இந்த ஆண்டின் போதும் ரூபா 7,284,205 நட்டத்தை பெற்றிருந்தது. | இந்த கம்பனியை கலைப்பதற்கு நிர்மாணித்ததன் காரணமாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் புதிய செயற்பாடுகள் கையேற்கப்படாதிருந்தமை மற்றும் பல வருட காலம் முதல் பொறியியலாளர் பிரிவு தொடராக நட்டத்தை பெற்றமையின் அடிப்படையில் முகாமைத்துவத்தின் கொள்கை தீர்மானத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு முதல் பொறியியலாளர் பிரிவில் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் கம்பனி ரூபா 9,526,584 செயற்பாட்டு வருமானம் மற்றும் ரூபா 2,417,809 நிலையான வைப்பு வட்டி வருமானம் கிடைத்திருந்த | நிறுவன ரீதியான நடவடிக்கைகளை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | போதிலும் அதனுடன் ஒப்பிடும் போது நிறுவனத்தின் செயற்பாட்டு செலவினம் ரூபா 19,229,364 அறிக்கையிடப் பட்டமையினால் நடப்பாண்டின் ரூபா 7,284,205 நட்டம் பெறப்பட்டிருந்தது. மேலும் அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. | |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது மொரகஹகந்த சுற்றுலா விடுதி மற்றும் பார்வையாளர் மேடையை நிர்மாணிப்பதற்கான உப ஒப்பந்தத்தை வழங்கும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக செயற்பட்டமையினால் கம்பனிக்கு ரூபா 20,200,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் இது தொடர்பாக முறையாக பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் பொது முயற்சிகள் குழுவிற்கு அறிக்கையிட வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அந்த பரிந்துரையின் பிரகாரம் முறையான பரிசோதனை நடாத்தப்படாதிருந்ததுடன் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக 2020 ஆம் ஆண்டின் போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தற்போது பெறுகை வழிகாட்டி கோவைகளுக்கு முரணாக செயற்பட்டதாக அவதானிக்கப்படுகின்ற தலைவர் மரணமடைந்திருந்த மையினால் அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அதற் சட்டமா அதிபர் பிரிவின் ஆலோசனை மற்றும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கோரப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்படாதிருந்ததுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்தோ அல்லது பணிப்பாளர் சபையின் மூலமோ அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக கம்பனியின் பதவியணிக்காக ஆட்சேர்த்தல், பதவியுயர்வு, பதவிகளுக்குரிய தகைமைகள் மற்றும் சம்பளம் என்பவற்றை தீர்மானித்தல் என்பவற்றின் சரியான தன்மை தொடர்பாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | கம்பனியை கலைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக 2018 ஆம் ஆண்டு முதல் கம்பனியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை நிறுத்துவதற்கும் மற்றும் பதவியணியினர்களை ஆட்சேர்த்தல், பதவியுயர்வு, சம்பள அதிகரிப்புக்களை கைவிடலின் அடிப்படையில் கம்பனிக்காக குறித்துரைத்த பதவியணியினர் மற்றும் அதற்குரிய ஆட்சேர்த்தல் நடைமுறைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் புதிய முகாமைத்துவத்தின் கீழ் நிறுவனத்திற்கு கிடைக்கின்ற புதிய செயற்திட்டங்களை கவனத்தில் கொண்டு அதன் அடிப்படையில் நிறுவன கட்டமைப்பினை மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பினை மேற்கொண்டு நிறுவன நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கையான மதியுரைச் சேவைகளை அமுல்படுத்துவதற்கு உரிய முகாமையாளர் (செயற்திட்டம்) பதவி மற்றும் பொறியியல் பிரிவில் பொறியியலாளர் பதவி என்பன 2019 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் 2022 யூன் வரை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியை கலைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக 2018 ஆம் ஆண்டு முதல் கம்பனியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை நிறுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. அதனால் உரிய பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - |